செ.வெ.எண்:-02/2020 நாள்:01.04.2020

## திண்டுக்கல் மாவட்டம்

## கொரோனா வைரஸ் நோய் சமூக பரவலை தடுக்கும் வகையில் பொதுமக்கள் அத்தியாவசிய தேவைக்காக வெளியிடங்களுக்கு வருவதை தவிர்க்கும் வகையில் வாகனங்கள் மூலமாக இருப்பிடங்களுக்கே சென்று காய்கறிகள் விற்பனை செய்ய நடவடிக்கை - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காய்கறி அங்காடி மற்றும் பிற காய்கறி விற்பனை கடைகள், அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் கடைகள், காலை 6 மணி முதல் மதியம் 2.30 மணி வரை மட்டுமே திறந்திருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும், மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் வசித்து வரும் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை தாங்கள் வசித்து வரும் வீட்டிற்கு அருகாமையில் சிரமமின்றி வாங்குவதற்கு ஏதுவாக திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மளிகை உட்பட அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படும் பொதுமக்களுக்கு அவரவர் வசித்து வரும் பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்ய 30-க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் வாட்ஸ் அப் எண் அளிக்கபட்டு, பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பொருட்கள் குறித்த விபரங்களை அனுப்பி வைத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் பொதுமக்களின் வீடுகளில் நேரிடையாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, காய்கறிகளுக்காக பொதுமக்கள் அதிக அளவில் வெளியிடங்களுக்கு வருவதால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் திண்டுக்கல் மாநகராட்சியில் எம்.வி.எம் கல்லூரி வளாகம், அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, லாரிபேட்டை, மேட்டுப்பட்டி, ரவுண்டு ரோடு, நத்தம் சாலையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் திண்டுக்கல் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தற்காலிக காய்கறி கடைகள் அமைக்கபட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனை தொடர்ந்து, பொதுமக்கள் அதிக அளவில் வெளியில் வருவதை தவிர்க்கும் வகையில் மாநகராட்சியில் உள்ள 48 வார்டுகளிலும் வாகனங்கள் மூலமாக காய்கறிகள் விற்பனை செய்ய திண்டுக்கல் மாநகராட்சி மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே போன்று, கூட்டுறவுத்துறையின் மூலமாக 2 வாகனங்களிலும், தோட்டக்கலைத்துறையின் மூலமாக 2 வாகனங்களிலும் காய்கறிகள் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது.

கொரோனா வைரஸ் சமூக பரவலை தடுக்கும் வகையில் பொதுமக்கள் வெளியிடங்களுக்கு வராமல் மாவட்ட நிர்வாகத்ததால் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**